**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**O.S. No. 171 / 2024**

**Dated: 13.08.2026**

Name : திரு.செல்லப்பாண்டி (PW1)

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் டூரிஸ்ட் கார் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன் அதன் மூலமாக பிரதிவாதி எனக்கு பழக்கம். பிரதிவாதி எவ்வகையில் பழக்கம் என்பதை நான் பிராதில் சொல்லவில்லை என்றால் ஆமாம். பிரதிவாதிகள் வீட்டு செலவிற்காக என்னிடம் பணம் கடன் கேட்டார்கள். நான் பிரதிவாதிகளுக்கு ரூ.5 லட்சத்தை ரொக்கமாக கொடுத்தேன். அவ்வாறு ரொக்கமாக கொடுத்தாக பிராதிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கடன் பெற்றதற்காக 50 ரூபாய் முத்திரை தாளில் கையொப்பம் இட்டார்களா கடன் உறுதி சீட்டில் கையொப்பம் இட்டார்களா என்றால் கடன் உறுதி சீட்டில் தான் கையொப்பம் இட்டார்கள். என் அண்ணன் மகன் பரத் என்பவர் புரோநோட்டை பூர்த்தி செய்தார். புரோநோட்டு படிவத்தை பிரதிவாதிகள் கொண்டு வந்தார்கள். நானும் 2ம் பிரதிவாதியின் கணவர் சதீஸ் என்பவரும் நல்ல நண்பர்கள் என்றால் சரியல்ல. சதீஸ் என்பவரை எனக்கு யார் என்று தெரியாது. நான் பிரதிவாதிகளுக்கு கொடுத்த கடனுக்கு 100க்கு ஒரு சதவீதம் வட்டி நிர்ணயம் செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 புரோநோட்டில் இரண்டு பிரதிவாதிகளும் கையொப்பம் செய்தார்கள். முதல் விசாரணை சாட்சியத்தில் பிரதிவாதிகள் அசலும் வட்டியும் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் பணத்தை பிரதிவாதிகள் கொடுக்கவில்லை என்று காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த இவ்வழக்கும் 2ம் பிரதிவாதி திருமதி.லட்சுமியின் சகோதரி திருமதி.சங்கீதா இவ்வழக்கு 1ம் பிரதிவாதி திரு.செல்லப்பாண்டிக்கு

எதிரராக தாக்கல் செய்துள்ள வழக்கும் ஒரே நாளில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் சொல்லப்பட்ட தொகை சம்மந்தமாக பிரதிவாதிகளுக்கு எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஞாபகமில்லை. 1, 2 பிரதிவாதிகள் என்ன வேலை பார்க்கிறார் என்றால் கல்லூரி விரிவுரையாளராகவும், 2ம் பிரதிவாதி என்ன வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. கடன் கொடுத்த ரூ.5 லட்சம் பணத்தை 500 ரூபாய் பணத்தாள்களாக கொடுத்தேன். 2ம் பிரதிவாதி லட்சுமி இந்நீதிமன்றத்தில் நொடிப்புநிலை வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி திருமதி.லட்சுமி நொடிப்பு நிலைவழக்கு தாக்கல் செய்த பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி திருமதி.லட்சுமியின் சகோதரியான திருமதி.சங்கீதாவின் கணவர் சதீஸ் என்பவர் ஆலோசனைபடி தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வித பழக்கமும் இல்லை என்றாலும் பிரதிவாதிகள் எந்த காலத்திலும் கடனாக கேட்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

RENGANATHAN BARATHIRAJA

Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.13 12:07:46 +0530

Sub Judge,
Usilampatti.